பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 07 2026 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குழாய் மூலம் குடிநீர் இணைப்பு திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் 15 கோடியே 89 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. பிரதமரின் நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவி திட்டத்தின்கீழ் இதுவரை 76 லட்சத்து 95 ஆயிரம் வியாபாரிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. Tokhan Sahu கூறியுள்ளார்.

3. விவசாயிகளுக்கு உகந்த வகையில் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

4. கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கியதை ரத்து செய்த நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்வதை தவிர்க்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில அரசை வலியுறுத்தியுள்ளது.

5. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் பாரா குண்டு எறிதல் பிரிவில் இந்தியாவின் ஷர்மிளா தங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் 15 கோடியே 89 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், மொத்தமுள்ள 19 கோடியே 36 லட்சம் வீடுகளில் 89 சதவீதம் அளவிற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் சுமார் 90 சதவீத ஊரகப் பகுதி வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளதாக திரு. சி.ஆர். பாட்டீல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்தியாவை உலகளாவிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் வகையில் மத்திய சுற்றுலா அமைச்சகம் ஏர் இந்தியா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஏர் இந்தியாவின் விரிவான உள்நாட்டு சர்வதேச சேவைகளையும், சுற்றுலா அமைச்சகத்தின் சுற்றுலாத்தல மேம்பாட்டு முயற்சிகளையும் ஒருங்கிணைப்பது இதன் நோக்கமாகும்.

இதன் மூலம் நாட்டில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க முடியும் என்று திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவி திட்டத்தின்கீழ் இதுவரை 76 லட்சத்து 95 ஆயிரம் வியாபாரிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதித்துறை இணையமைச்சர் திரு. Tokhan Sahu கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இந்த திட்டத்தின்கீழ் 18 ஆயிரத்து 475 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்திட்டம் சாலையோர வியாபாரிகள் தங்களுடைய வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் அவர்களுடைய ஆண்டு வருமானம் அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் சாலையோர வியாபாரிகளுடைய மின்னணுப் பணப் பரிவர்த்தனை பயன்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், வாழ்க்கைத் தரம் மேம்பட்டுள்ளதாகவும் திரு. Tokhan Sahu தெரிவித்தார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு உகந்த வகையில் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற வேளாண் பட்ஜெட் தொடர்பாக விவசாயிகள் மற்றும் வேளாண் சார்ந்த் தொழில் புரிவோருடனான கருத்துக் கேட்புக் கூட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநிலத்தின் மண்வள மேம்பாடு, நீர் மேலாண்மை, வேளாண் சந்தை சீர்திருத்தங்கள், வேளாண்மையில் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல், பயிர் உற்பத்தி திறன், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு விலை பாதுகாப்பு, நவீன வேளாண்

தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகியவற்றுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்று அவர் கூறினார்.

விவசாயிகளின் மற்றும் வேளாண் தொழில்புரிவோரின் கருத்துகள், கோரிக்கைகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் எல்நினோ வருடமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து விவசாயிகளும் தங்களது பெயர்களை காப்பீடு செய்து வருவாய் இழப்பை தவிர்க்க வேண்டும் என்றும் திரு. வினோத் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாநில அமைச்சர்கள் திரு. செங்கோட்டையன், திரு. வெங்கடரமணன் உள்ளிட்ட 10 அமைச்சர்கள் பங்கேற்றதாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கியதை ரத்து செய்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்வதை தவிர்க்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில அரசை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கிய அரசாணையை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ரத்து செய்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வேலை வழங்குவது கருணை அடிப்படையிலானது என்றாலும், சட்டத்திற்குப் புறம்பானதாக உள்ளது என்றும், தவறான முன்னுதாரணமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

எல்நினோவால் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுக்கும் வகையில் சேலம் மாவட்டத்தில் வேளாண்மை துறை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

வறட்சியால் ஏற்படும் மகசூல் பாதிப்பை தடுக்கும் வகையில் நவீன தொழில்நுட்பம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Vijayakumar – 45 Sec)

<<<<>>>>

## இருவரிச் செய்திகள்

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான விவகாரத்தில் பிரிட்டன், யுக்ரைனுக்கு ஆதரவாக செயல்படும் என்று பிரதமர் திரு. Andy Burnham தெரிவித்துள்ளார்.

----------

ஈரான் ஆதரவு புரட்சிப் படையினர் ஏவிய ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

----------

மேகாலயாவில் மின்சார வாகனங்கள் வாங்குவோருக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

----------

மகாராஷ்டிரா ஆசிரியர் தகுதித் தேர்வு வினாத்தாள் கசிவு வழக்கில் முக்கிய குற்றவாளி Bhiwandi நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

----------

நாட்டில் இன்ஸ்டாகிராம் வலைதளத்திற்கு அடுத்த மாதம் 25ஆம் தேதி முதல் தடை விதிக்கப்பட உள்ளதாக பரவும் தகவல் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

----------

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் அத்துறைக்கான அமைச்சர் திரு. மதன் ராஜா தலைமையில் நடைபெற்றது.

----------

திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் அருகே விபத்தில் சிக்கிய காரை விடுவிக்க 5 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்ற சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் கைது செய்யப்பட்டார்.

----------

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே காவல்துறையினர் நடத்திய வாகன சோதனையில் தடை செய்யப்பட்ட 370 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

----------

நாமக்கல் மாவட்டம் நாரைகிணறு பகுதியில் விவசாயிகள் பட்டா கேட்டு கோரிக்கை விடுத்துள்ளதால் அதுகுறித்து மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று ஆட்சியர் திரு. மதுபாலன் கூறியுள்ளார்.

----------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு முடித்து உயர்கல்வி சேராத மாணவர்களுக்கான வழிகாட்டு நிகழ்ச்சி நாளை மறுநாள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------

*சிங்கப்பூரில் இருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட 5 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பிலான 4 கிலோ தங்கக் கட்டிகளை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.*

----------

## *விளையாட்டுச் செய்திகள்*

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் ஷர்மிளா தங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பாரா குண்டு எறிதல் பிரிவில் அவர் 9 புள்ளி எட்டு ஒன்று மீட்டர் தூரம் எறிந்து இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.*

*மற்றொரு இந்திய வீராங்கனை ஷில்பா ஷைலா வெண்கலப் பதக்கம் வென்றார்.*

*ஆடவர் பளு தூக்குதல் 79 கிலோ எடைப் பிரிவில் வல்லூரி அஜய பாபு வெள்ளிப் பதக்கம் வென்றார்.*

*ஆடவர் உயரம் தாண்டுதல் போட்டியில் இந்தியாவின் சர்வேஷ் அனில் குஷாரே வெள்ளிப் பதக்கம் வென்றார்.*

*மகளிர் 58 கிலோ பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் பிந்தியா ராணி தேவி வெண்கலப் பதக்கம் வென்றார்.*

*குத்துச்சண்டைப் போட்டியில் அன்குஷ் பங்கல், சாக்ஷி சௌத்ரி ஆகியோர் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 8-ஆம் இடத்தில் உள்ளது.*

--------------

*தைவான் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.*

*இப்போட்டியில் இந்தியாவின் ஹெச்.எஸ். பிரனாய், தன்யா ஹேமந்த், அன்மோல் கர்ப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.*

*<<<<>>>>*